### கலாத்தியர் 5:1

நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குக் கீழ்ப்படாமல் நிலைநில்லுங்கள்.

### உரோமாபுரியார் 1 8:15

அப்படியே நீங்கள் திரும்பவும் பயத்தோடுகூடிய அடிமைத்தனத் தின் புத்தியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடுகிற சுவீ காரப் பிள்ளைகளுக்குரிய புத்தியைப் பெற்றுக்கொண்டீர்கள். (2 தீமோ. 1:7.)

### இசாயாஸ் ஆகமம் 58:6

அதைவிட, அக்கிரமத்தின் சங்கிலியை அறுத்துவிடுங்கள்; இருத்துங் கடன் சீட்டுப் பாரத்தை இறக்குங்கள்; நெருக்கப்பட்டாரை விடுதலை செய்து அனுப்புங்கள்; சுமை யானதெல்லாவற்றையும் உடைத் தெறியுங்கள்;

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 8:34

சேசுநாதர் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: பாவத்தைச் செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமைப்பட்டவனாய் இருக்கி றான். (உரோ. 6:15; 2 இரா. 2:19.)

### உபாகமம் 5:15

நீயும் எஷஜிப்த்திலே அடிமையா யிருந்தாயென்றும், அங்கேயிருந்து உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வல்ல கரத்தாலும் ஓங்கிய புயத்தா லும் புறப்படப் பண்ணினாரென்றும் நினைத்துக்கொள். அதுபற்றித் தானே சாபத் நாளை அநுசரிக் கும்படி உனக்குக் கற்பித்தார்.

### கொரிந்தியர் 1 12:13

அதெப்படியென்றால், நாம் யூத ரானாலும், புறஷஜாதியாரானாலும், அடிமைகளென்றாலும், சுயாதீனரானாலும் எல்லோரும் ஒரே இஸ்பிரீத்துவி னாலே ஒரே சரீரமாயிருக்கும்படிக்கு ஞானஸ்நானம் பெற்று, எல்லோரும் ஒரே இஸ்பிரீத்துவில் பானம் பண்ணுகி றோம். (கலாத். 3:28; எபே. 2:13, 14.) ழுழுழு 13. எல்லோரும் ஒரே இஸ்பிரீத்துவில் பானம்பண்ணுகிறோமென்பதற்கு அர்த்த மாவது: இஸ்பிரீத்துசாந்து ஆத்துமத்திலே பாய்ந்தோடுகிற ஷஜீவ ஷஜலமாயிருக்கிறாரென்று அப்போஸ்தலர் நடபடி 2-ம் அதிகாரம் 17, 18-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இஸ்பிரீத்துசாந்துவில்

பானம்பண்ணுகிறதென்கிறது இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களால் நிரப்பப்படுகிறதென்றறிக.

உரோமாபுரியார் 1 6:5-6

ஆகையால் நாம் அவருடைய மரணத்துக்கு ஒப்பாக அவரோடு ஒட்டவைக்கப்பட்டவர்களானால், உத்தானத்துக்கும் அவரோடு ஒத்தவர்களாக அவரில் ஒட்டவைக்கப்படுவோம். ஏனெனில் பாவச் சரீரம் அழிந்து, நாம் இனிப் பாவத்துக்கு அடிமைக ளாகாதபடிக்கு, நம்முடைய பழைய மனிதன் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறானென்று அறிந்திருக்கிறோம். ழுழுழு 6. பழைய மனிதன் என்பதும், பாவச் சரீரம் என்பதும் என்னவெனில், ஷெஜன்மப் பாவத்தினாலே, தர்ம குணங் கெட்டு, பாவத்துக்குச் சார்பான பற்றுதலையுடைய மனுஷனுடைய சுபாவமாம். புது மனிதனோவென்றால் வரப்பிரசாதத்தினாலே புதிதான ஞான சீவியத்தை அடைந்த சுபாவமென்றறியவும்.

கலாத்தியர் 3:28-29

யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீன னென்றுமில்லை. ஆணென்றும் பெண் ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் ஒன்றாயிருக் கிறீர்கள். நீங்கள் கிறீஸ்துவினுடையவர்களானால், அபிரகாமுடைய வித்தாயும் வாக்குத்தத்தத்தின்படிக்குச் சுதந்திரவாளிகளுமாயிருக்கிறீர்கள்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 8:36

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே நீங்கள் சுயாதீனராயிருப்பீர்கள். (உரோ. 8:2; கலாத். 4:6, 7.)

பழமொழியாகமம் 12:24

வல்லவர்களின் புஷஜம் ஆட்சி செலுத்தும்; அசமந்தமான கரமோ வெனில் கப்பங்களுக்குச் சேவிக்கும்.

இராயப்பர் பொது நிருபம் 1 2:16

உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடுபோர்வையாகக் கொள் ளாமல், மெய்யாகவே சுயாதீனராய், சர்வேசுரனுடைய ஊழியரைப்போல் பணிந்து நடங்கள்.

பழமொழியாகமம் 22:7

ஐசுவரியவான் ஏழைகளுக்கு இராசாவாயிருக்கிறான்; கடன் வாங்குகிறவனோ கடன்காரனுக்கு அடிமையாகிறான்.

உரோமாபுரியார் 1 6:22

இப்பொழுதோவெனில், பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டுச் சர்வேசுரனுக்கு அடிமைகளானதினாலே, உங்களுக்குப் பலனாகப் பரிசுத்ததனமும், முடிவாக நித்திய சீவியமும் கிடைக்கின்றது.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 4:18

ஆண்டவருடைய இஸ்பிரீத்து வானவர் என்மேலிருக்கிறார். ஆதலால் அவர் என்னை அபிஷேகம்பண்ணித் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங் கிக்கவும், இருதயம் நொறுங்கினவர்க ளைக் குணப்படுத்தவும்,